**PONDICHERRY MUNICIPALITY**
**REVENUE SECTION – II**
**PUDUCHERRY**
*****

No:550/PM/RO-II/A3/2024 - 2025 Puducherry, the 08 NOV 2024

On behalf of the Pondicherry Municipal Council e- Auction applications are hereby invited by the Commissioner, Pondicherry Municipality, Puducherry for licensing out of various Rights for collection of fees / charges over Municipal utility services from the beneficiaries as detailed below

**Schedule for e- auctioning of the Rights for collection of fees / charges over 2 various items of Pondicherry Municipal utility services**

| **Particulars :** | **Date and Time:** |
|---|---|
| (i). Issue of e-Auction application (download) | : from 11.11.2024 to 1811.2024 (10.00 AM to 04.00 P.M) |
| (ii). Availability of NIT and remittance of EMD | :from 11.11.2024 to 18.11.2024 (10.00 AM to 3.30 PM) |
| (iii). Closing date & time for submission of Application | : 18.11.2024 (3.30 PM) |
| (iv) Date & Time of opening e-Auction | : from 22.11.2024 (11.00 AM to 05.00 PM) |

The participants shall submit the application form to the Office of the Revenue Section-II, H.M. Kassim Road (Near Government Chest Clinic), Puducherry along with the EMD amount @ 20% of the minimum monthly upset licence fee arrived for the licence period by means of Demand Draft, **(preferable)** drawn in favour of the Commissioner, Pondicherry Municipality or through NEFT to Indian Overseas Bank (Town Branch) Account No:151601000005000, IFSC CODE:IOBA 0001516, before the closing date and time for submission of e-Auction application. The terms conditions and details of e- Auction Notice, application form for participating in e- auction minimum monthly upset licence fee can be downloaded and viewed from the Website, https://www.py.gov.in and www.pdymun.in. Any corrections / alterations in the Notice will be hosted in the above said Web sites only.

Kandasamy 07/11/2024

**(M. KANDASAMY)**
**COMMISSIONER**

புதுச்சேரி நகராட்சி
வருவாய் பிரிவு-2
புதுச்சேரி

எண்: 550/பு.ந/வ.அ.2/அ.3/ 2024 தேதி: 8 NOV 2024

## அறிவிப்பு

புதுச்சேரி நகராட்சியின் சார்பாக புதியதாக கட்டப்படும் பேருந்து நிலையத்தில் பல்வேறு வகையான பயன்பாட்டு சேவை இனங்களில் வரி வசூல் செய்வதற்கான உரிமங்களை மின்னணு ஏலம் கோருவதற்கான விண்ணப்பங்கள் புதுச்சேரி நகராட்சி மன்றம் சார்பாக, புதுச்சேரி நகராட்சி ஆணையர் அவர்களால் பொதுமக்களிடமிருந்து பின்வருமாறு கோரப்படுகிறது.

| 2 வகையான புதுச்சேரி நகராட்சியின் பயன்பாட்டு சேவை இனங்களில் வரி வசூல் செய்யும் உரிமத்திற்கு நடைபெற உள்ள மின்னனு ஏல அட்டவணை | | |
|---|---|---|
| **வ.எண்** | **விவரங்கள்** | **கால அட்டவணை** |
| அ | மின்னணு ஏல விண்ணப்ப படிவம் விணியோகம் (பதிவிரக்கம்) | 11.11.2024 முதல் 18.11.2024 (காலை 10.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை |
| ஆ | ஏலம் கோருவதற்கான அறிவிப்பில் இடம் பெற்றிருக்கும் ஏல முன் வைப்புத்தொகை செலுத்துதல் | 11.11.2024 முதல் 18.11.2024 (காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 3.30 மணி வரை) |
| இ | ஏலம் கோருவதற்கான விண்ணப்ப படிவம் சமர்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் | 18.11.2024 (பிற்பகல் 3.30 மணி வரை) |
| ஈ | மின்னனு ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் | 22.11.2024 (காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை) |

மின்னணு ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் தங்கள் விண்ணப்பத்தினை ஏலம் விடப்படும் காலத்திற்கு கணக்கிடப்பட்ட குறைந்த பட்ச மாதாந்திர ஏலத் தொகையில் 20% தொகையை முன்வைப்புத் தொகையாக (EMD) புதுச்சேரி நகராட்சி ஆணையர் பெயரில் எடுக்கப்பட்ட வரைவு காசோலை **(விரும்பத்தக்கது)** மற்றும் மின்னணு ஏல விண்ணப்பம் சமர்பிப்பதற்காக நிர்ணயிக்கபட்ட கடைசி தேதி மற்றும் நேரத்திற்குள் எச்.எம். காசிம் வீதி, (அரசு மார்பக நோய் பிரிவு அருகில்) இயங்கிவரும் நகராட்சியின் வருவாய் பிரிவு-2 அலுவலகத்தில் சமர்பிக்கவேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி(நகர கிளை) கணக்கு எண்: 151601000005000, IFSC Code IOBA 0001516-ல் கடைசி தேதிக்குள் செலுத்த வேண்டும்.** விதிமுறைகளும் வரைமுறைகளும், ஏலம் கோரும் அறிவிப்பு (NIT) ஏல விவரங்கள், மின்னணு ஏல அறிவிப்பு, மாதாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை போன்றவற்றை https://www.py.gov.in மற்றும் www.pdymun.in வளைதளங்களில் பதிவிறக்கம் செய்து பார்வையிட முடியும். ஏல அறிவிப்பில் தேவைப்படும் திருத்தங்கள் மாற்றங்கள் எதுவாயினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வளைதளங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

Kandasamy 07/11/2024

**(M. KANDASAMY)**
**COMMISSIONER**

விலை ரூ.500.00 (ரூபாய் ஐநூறுமட்டும்)
ரசீது எண் :
நாள் :
வ.அ. / உ.வ.அ :

எண்:.550 / பு.ந / வ.அ.பி-2 /அ.3 / 2024 – 2025 தேதி: 8 NOV 2024

**புதுச்சேரிநகராட்சி**
**(வருவாய்பிரிவு-2)**

புதுச்சேரி நகராட்சியால்வழங்கப்பெறும் பொது உரிமங்கள்குறித்து மின்னனு ஏலத்தில் பங்கு பெறுவதற்கானவிண்ணப்பபடிவம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :
(தனித்தனி எழுத்தில் தெளிவாகஎழுதவும்)

2). தகப்பனார் / கணவர்பெயர் :

3). விண்ணப்பதாரரின் நிலை (தனிநபர் / கூட்டு நிறுவனம் / கூட்டுறவுசங்கம் / இதர பிரிவு) :

4). தற்போதைய தொழில் மற்றும் ஆண்டுவருமானம் :

5). கடிதத் தொடர்புக்கான முகவரி :

6). விண்ணப்பதாரரின் நிரந்தர குடியிருப்பு முகவரி :
(குடும்ப அடையாள அட்டை நகல் இணைக்கவும்)

7). ஆதார் எண் (நகல் இணைக்கவும்)

8). ஏலம் கேட்க இருக்கும் உரிமத்தின் விபரம் :

9).முன்வைப்புத்தொகை (EMD) செலுத்தியவிபரம் :
ரூ.---------------வரைவோலைதேதிமற்றும்வங்கியின்பெயர் :

10). தொலைபேசிஎண் / அலைபேசிஎண் :

11). விண்ணப்பதாரர்உரிமதாரராகஉறுதிபடுத்தப்பட்டால் அவருக்குபொறுப்பாகவிளங்கும்இரண்டுநபர்கள் முகவரிமற்றும்அவர்களின்கையொப்பம் :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவையும் நான் நன்கு அறிந்தவகையில் உண்மை என்றும், நம்பகமானவை என்று உறுதிகூறுகிறேன் அப்படி ஏதாகினும் பின்நாளில் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டது தெரியவந்தால் உடனடியாக எனக்கு அளிக்கப்பட்ட உரிமத்தை ரத்துசெய்யவும் சம்மதிக்கிறேன். மேலும், புதுச்சேரி நகராட்சியின் சட்டம் மற்றும் விதிமுறைகள், உரிமங்கள் குறித்த நிபந்தனைகள் அவ்வப்போது இயற்றப்படும் தனிபொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் உரிமம் குறித்து செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையின் நிபந்தனைகள் அனைத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்று இதன்மூலம் உறுதிகூறுகிறேன்.

**விண்ணப்பதாரரின்கையொப்பம்**

**இடம் :**
**நாள் :**

புதுச்சேரி நகராட்சி

வருவாய் பிரிவு – 2

***

எண்:550 /பு.ந./ வ.அ.2/ 2024 -2025 தேதி: - 8 NOV 2024

## மின்னணு ஏல அறிவிப்பு (e-Auction notice)

புதுச்சேரி நகராட்சியின் சார்பாக புதியதாக கட்டப்படும் பேருந்து நிலையத்தில பல்வேறு வகையான கீழ்காணும் வகைகளுக்கு உபயோகிப்பாளர்களிடம் நகராட்சி மன்றம் சார்பில் (கட்டணம் வசூலிப்பதற்கான) ஒவ்வொரு இடத்திற்கும் 01.12.2024 முதல் 31.03.2026 வரையிலான காலத்திற்கு உரிமம் வழங்கும்பொருட்டு மின்னணு ஏலம் வருகின்ற 22.11.2024 (வெள்ளிக் கிழமை) அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை www.auctionindia.com என்ற வலைதளத்தின் இணையதளம் மூலம் நடைபெற உள்ளது.

| வ.எண் | ஏலம் விடப்படும் உரிமங்களின் விபரம் / இனம்/ இடம்/ தன்மை | கணக்கிடப்பட்ட ஏலத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. | செலுத்தப்பட வேண்டிய ஏல முன்வைப்புத் தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Right of parking fee collection for two wheelers and four wheelers at Rajiv Gandhi Bus Stand area earmarked at 2 locations (Parking at newly constructed area and existing parking place in north east corner of bus stand)<br>ராஜீவ்காந்தி புதிய பேருந்து நிலைய பகுதியில் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு பார்க்கிங் கட்டணம் வசூலிக்கும் உரிமை 2 இடங்கள் (பஸ் ஸ்டாண்டின் வடகிழக்கு மூலையில் புதிதாக கட்டப்பட்ட பகுதி மற்றும் ஏற்கனவே உள்ள வாகன நிறுத்துமிடம்) | 2,67,000 | 8,54,400 |
| 2 | Right of fee collection for pay and use of toilet blocks at New Bus Stand = 3 units ( 2 units in new building and one existing renovated toilet in north east corner)<br>புதிய பேருந்து நிலையத்தில் கழிப்பறை பயன்படுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் 3 (புதிய கட்டிடத்தில் 2 மற்றும் வடகிழக்கு மூலையில் தற்போதுள்ள ஒரு புதுப்பிக்கப்பட்ட கழிப்பறை) | 3,65,000 | 11,68,000 |

1. The e- auction will be conducted through online in the Website **www.auctionindia.com** by the reputed Agency of Pondicherry Municipality, Puducherry ,i.e., M/s. T.V.S. Electronics Ltd., (Auction Services) South Phase 7A,IInd Floor, Industrial Estate, Chennai. The terms and general conditions including the details of online e-Auction shall be made known thought the website **www.auctionindia.com.**

1. இந்த ஏலம் இந்நகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட சேவையாளர் (M/s. TVS Electronic Ltd.) மூலமாக www.auctionindia.com என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலமாக நடைபெறும். ஆன்லைன் ஏல நிபந்தனைகள் மற்றும் பொது கட்டுப்பாடுகள் ஆகியவை அடங்கிய ஏல விவரங்கள் www.auctionindia.com என்ற இணையதளத்தில் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

2. The participants may quote their desired auction bid amount which higher than the calculated upset price.

2. ஏலம் கேட்பவர் குறிப்பிட விரும்பும் ஏலத்தொகை நகராட்சியால் கணக்கிடப்பட்ட ஏல தொகையைவிட அதிகமாக இருக்கவேண்டும்

3. **The other terms and conditions of e- Auction Notice shall be downloaded from the website address https:www.py.gov.in.**

3. மின்னணு ஏல அறிவிப்பின் இதர விதிமுறைகள், நிபந்தனைகள் "www.py.gov.in". என்ற இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

4. Even though the details of calculated bid value and the amount of EMD to be remitted are furnished along with the application form, the same will also be displayed in the Notice Board of the Office of the Revenue Section-II, H.M. Kassim Road, ( Near Government Chest Clinic), Puducherry.

4. ஏல நிபந்தனைகளின் விபரம் கணக்கிடப்பட்ட ஏலத்தொகை மற்றும் செலுத்த வேண்டிய முன்வைப்புத்தொகை விவரங்கள் விண்ணப்ப படிவத்தோடு வழங்கப்படுவதுடன் எச். எம். காசிம் சாலையில் (அரசு மார்பக நோய் பிரிவு அருகில்) உள்ள நகராட்சி கட்டிடத்தில் இயங்கிவரும் நகராட்சியின் வருவாய் பிரிவு-2 அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டுள்ளது.

5. The participants of the said e-Auction shall download the prescribed Application Form from the website https:www.py.gov.in from11.11.2024 to 18.11.2024 @ Rs.500/-per the Application and the same may be collected along with the EMD amount to be collected on the date of submission of application through online / Demand Draft Indian Overseas Bank A/c. 151601000005000 **IFC Code No:IOBA 0001516**

5. மேலே கூறப்பட்ட மின் ஏலத்தில் பங்கேற்பவர்கள் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை https: www.py.gov.in என்ற வலைதளத்திலிருந்து 11.11.2024 முதல் 18.11.2024 வரை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பத்திற்கு ரூ.500/- மற்றும் முன்வைப்புத் தொகை (EMD) வரைவு மூலம் அங்கிகரிக்கப்பட்ட வங்கி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கணக்கு எண்:151601000005000 **IFC Code No:IOBA 0001516** கடைசி தேதிக்குள் செலுத்திவிட வேண்டும்.

6. The persons willing to participate in the said e-Auction shall remit the EMD amount in the form of Demand Draft drawn in favour of the Commissioner, Pondicherry Municipality/ NEFT before the commencement of e-Auction along with the application as the e-Auction is to be conducted through online the user name and the pass word for participating in the said e-Auction, and the same will be obtained before the date of commencement of e-Auction.

6. ஏலம் எடுப்பதற்கு தேவையான முன்வைப்புத்தொகையை (EMD) தேசிய மயமாக்கப்பட்ட வங்கி / கூட்டுறவு / ஷெடூல்டு வங்கியில் "ஆணையர், புதுச்சேரி நகராட்சி" என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக (DEMAND DRAFT) ஏல விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். EMD தொகையை மின் ஏலம் தொடங்கும் முன் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும். மேற்கூறிய மின் ஏலத்தில் பங்கேற்பதற்கான பயனர் பெயர் மற்றும் ரகசிய குறியீட்டு எண் ஏலம் தொடங்குவதற்கு முன் தரப்படும்.

7. The participants willing to get more details in this regard shall approach the Office of the Revenue Officer -II, Pondicherry Municipality, Puducherry, during all working days.

7. மேலும், விவரங்கள் வேண்டுவோர் புதுச்சேரி நகராட்சி, வருவாய் பிரிவு-2 அலுவலகத்தை வேலை நாட்களில் அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. The particulars to be furnished along with the application are (i). The Photo copy of family identify card and Aaadhar Card (ii). Mobile Number /Phone Number.

8. விண்ணப்பத்துடன் வழங்க வேண்டிய விவரங்கள் (1). குடும்ப அடையாள அடைடை மற்றும் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் (2). மொபைல் எண் / தொலைபேசி எண்:

9. In the event of missing the Password and User I.D, the same will be issued on payment equal to the cost of application for re allotment of the same.

9. இணையதளத்திற்காக அளிக்கப்படும் முகவர் உபயோகிப்பவர் பெயர் (Password) ரசகிய வார்த்தை (User I.D) விண்ணப்பதாரரின் பொறுப்பில் பாதுகாக்கப்பட வேண்டும். தொலைந்துபோனால் புதிய ரகசியபதிவு மறுபடியும் தேவைப்படும்பட்சத்தில் மறுபடியும் விண்ணப்பக் கட்டணம் செலுத்தவேண்டும்.

10. The participants who have paid the EMD along with the application on or before 18.11.2024 (3.30 pm) through Demand Draft / NEFT before 3.30 P.M shall only be permitted for participating in the said e-auction.

10. கட்டாண முன்வைப்புத்தொகையை வரைவோலை விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டிய கடைசி தேதி:18.11.2024 மாலை 3.30 மணி வரை. இந்த காலக்கெடுவிற்கு முன்னதாக முன்வைப்புத்தொகை செலுத்துபவர் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ளத் அனுமதிக்கப்படுவார்கள்.

11. The participants should furnish separate application for each and every items of Municipal Utility services along with prescribed EMD amount.

11. ஒவ்வொரு வகை உரிமத்திற்க்கும் தனித் தனியாக விண்ணப்பம் அளித்து அதற்குண்டான (EMD) முன் வைப்புத் தொகை செலுத்தவேண்டும்.

12 All the EMD amount by the participants shall be returned to the unsuccessful bidders after 10 days from the date of commencement of e auction except L1 & L2, and the cost of the EMD amount shall be adjusted against the bid amount of the successful bidders and the remaining shall be invariably be paid by the bidder.

12. **L.1** மற்றும் **L.2** தவிர வெற்றிபெறாத ஏனைய ஏலதாரர்களுக்கு கட்டாய முன்வைப்புத்தொகைக்கான அவர்களுடைய வரைவு காசோலையை பத்து (10) நாட்களுக்குப் பிறகு திருப்பித்தரப்படும் ஏலத்தில் வெற்றிபெறுபவர்கள் அவர்கள் செலுத்த வேண்டிய முழுதொகையில் வைப்புத்தொகையை சரிசெய்து மீதத் தொகையை செலுத்த வேண்டும்.

13. The successful bidder (L.1) should pay the bid amount for the period of full lease periods (i.e., 01.12.2024 to 31.03.2026)(16 months) and the security deposit amount equal to one month's licence fee in advance within 3 days from the date of the commencement of e – auction .

13. வெற்றிபெற்ற ஏலதாரர் **(L.1)** 16 மாதத்திற்கானமுழு ஏலத்தொகை (01.12.2024 to 31.03.2026) மற்றும் ஒரு மாத உரிமத்தொகைக்கு சமமான காப்புறுதி தொகையை மின்னனு ஏலம் நடந்து முடிந்த தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அப்படி செலுத்தத் தவறும்பட்சத்தில் அவருடைய முன்வைப்புத் தொகைக்கான வரைவோலையை இழக்க நேரிடும்.

14. The participants should quote the bid amount in multiples of Rs.100/- in the case of items with monthly upset license fees less than Rs.10,000/-, and should quote the bid amount in multiples of Rs.500/- in the case of items with monthly upset License fees higher than Rs.10,000/- and should quote the bid amount in multiples, of Rs.1,000/- in the case of items with the monthly upset License Fees higher than Rs.50,000/-

14. ஏலத்தில் மேற்படி இனங்களுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை **ரூ.10,000/-க்கு** கீழிருந்தால் **ரூ.100/-ன்** மடங்காகவும் **ரூ.10,000/-க்கு** மேலிருந்தால் **ரூ.500/-ன்** மடங்காகவும் **ரூ.50,000/-க்கு** மேலிருந்தால் **ரூ.1,000/-** ன் மடங்காகவும் ஏலக்கேள்விகள் இருக்க வேண்டும்.

15. The decision of the Commissioner, Pondicherry Municipality, is the final in the event of consequences, if any, in conduct of above e- auction.

15. மேற்கண்ட ஏலத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் புதுச்சேரி நகராட்சி ஆணையரின் முடிவே இறுதியானது.

16. The Commissioner, Pondicherry Municipality have reserved with all the rights in respect of acceptance or cancellation or alteration in conduct of auction.

16. ஏலத்தை ஏற்றுக்கொள்ளவோ, ரத்துசெய்யவோ அல்லது ஏலத்தில் மாற்றம் செய்யவோ நகராட்சி ஆணையருக்கு முழு உரிமை உண்டு.

17. The successful bidders should undertake required maintenance works in the utility items of services at their own risk and cost and in the case of Pay and use of toilet blocks it should be maintained in clean and hygienic way for public use. The successful bidder shall follow the SOP for clean of Public Toilet hosted in the Municipal website, failing which, the licence is liable to be cancelled and penalty be levied by the Commissioner.

17. ஏலத்தில் வெற்றிபெற்ற ஏலதாரர் தங்கள் சொந்த செலவில் பயன்பாட்டுக் சேவை இனங்களில் தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் மேலும் பணம் செலுத்தி பயன்படுத்தும் கழிப்பறைகளை பொருத்தமட்டில் பொது பயன்பாட்டிற்காக சுத்தமாகவும் சுகாதரமாகவும் பராமரிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற ஏலதாரர் கழிப்பறைகளை பராமரிக்கும் முறைபற்றி புதுச்சேரி நகராட்சி இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள சீர்தர இயக்க செயல்முறை ( SOP – Standard Operating Procedure) –யை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். தவறும்பட்சத்தில் உரிமம் ரத்து செய்வதுடன் நகராட்சி ஆணையரால் அபராதமும் விதிக்கப்படும்.

18. The Commissioner, Pondicherry Municipality has the right of cancellation of licence without any prior notice and in the case, the licence fee shall be refunded at the prescribed time limit by this municipality.

18. எந்தவொரு முன்னறிவிப்புமின்றி உரிமத்தை ரத்து செய்ய புதுச்சேரி நகராட்சி ஆணையருக்கு முழு உரிமை உண்டு அப்படிப்பட்ட நிலையில் உரிமத் தொகை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் உரிமதாரருக்கு திருப்பித்தரப்படும்

19. The participants shall submit the application form to the Office of the Revenue Section-II, H.M. Kassim Road, (Near Government Chest Clinic), Puducherry, along with EMD amount @ 20% of the Minimum monthly upset licence fee arrived for the licence period by means of Demand Draft, **(preferable)** drawn in favour of the Commissioner, Pondicherry Municipalityor through NEFT to Indian Overseas Bank (Town Branch) Account No:151601000005000, IFSC CODE:IOBA 0001516, before the closing date and time for submission of e-Auction application. The terms conditions and details of e- Auction Notice form for participating in e- auction minimum monthly upset licence amount can be downloaded and viewed from the Website, https://www.py.gov.in and www.pdymun. in. Any corrections / alternations in the Notice will be hosted in the above said Web sites only.

19. மின்னணு ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் தங்கள் விண்ணப்பத்தினை ஏலம் விடப்படும் காலத்திற்கு கணக்கிடப்பட்ட குறைந்த பட்ச மாதாந்திர ஏலத் தொகையில் 20% தொகையை முன்வைப்புத் தொகையாக (EMD) புதுச்சேரி நகராட்சி ஆணையர் பெயரில் எடுக்கப்பட்ட வரைவு காசோலை **(விரும்பத்தக்கது)** மற்றும் மின்னணு ஏல விண்ணப்பம் சமர்பிப்பதற்காக நிர்ணயிக்கபட்ட கடைசி தேதி மற்றும் நேரத்திற்குள் எச். எம். காசிம் சாலை (அரசு மார்பக நோய் பிரிவுக்கு அருகில்) நகராட்சி கட்டிடத்தில் இயங்கிவரும் நகராட்சியின் வருவாய் பிரிவு-2 அலுவலகத்தில் சமர்பிக்கவேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி(நகர கிளை) கணக்கு எண்: 151601000005000, IFSC Code IOBA 0001516-ல் கடைசி தேதிக்குள் செலுத்த வேண்டும்.** விதிமுறைகளும் வரைமுறைகளும், ஏலம் கோரும் அறிவிப்பு (NIT) ஏல விவரங்கள், மின்னணு ஏல அறிவிப்பு, மாதாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை போன்றவற்றை Website, https://www.py.gov.inமற்றும்www.pdymun.in வளைதளங்களில் பதிவிறக்கம் செய்து பார்வையிட முடியும். ஏல அறிவிப்பில் தேவைப்படும் திருத்தங்கள் மாற்றங்கள் எதுவாயினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வளைதளங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

Kandasamy
07/11/2024

**(M. KANDASAMY)**
**COMMISSIONER**